உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணே நம:

சிவதத்வசிந்தாமணி.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

ஸ்ரீ,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னபட்டணம்

ஸ்ரீ,

சிவாநந்தநிலைய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவதத்வசிந்தாமணி

முகவுரை.

பரமவைதிக சுத்தசிவசந்மார்க்கம் பற்றிவாழுஞ் சிவனடியார் பலர்க்கும் வந்தனபூர்வகமா யறிவிப்பது;—"பரப்பிரமவிவேகம்" என்னுஞ் சுவடி யொன்று பாஞ்சராத்திரிகளால் சில தினங்களுக்கு முன் வெளியிடப்பட்டது. அதைப்பார்த்தபோது சிவநிந்தைக்கோர் களஞ்சியமெனக் காணப்பட்டது. அதன் முகவுரையில், பிள்ளைப் பெருமாளையங்காரென்னு மொருவனாலது செய்யப்பட்டதாகவெழுதி யிருந்தது. அவ்வழுத்திரட்டை யன்னோர் வெளியிட்ட காரணம் ஸ்ரீலஸ்ரீ - ஆறுமுகநாவல ரவர்கள் பதிப்பித்த ஸ்ரீஹரதத்தாசாரிய சுவாமிகள் சுலோக * மொழி பெயர்ப்புக்கு மாறாக வெனவு மதிற் காணப்பட்டது. ஒருநூலுக்கு மற்றொன்று மாறாக வெளிப்படுங் கால் முன்னையதைப்பூர்வபட்சமாக்கிப் பின்னையது ஸித்தாந்தமாக அமைதல்வேண்டும். இவ்விலக்கணம் அவ்வமங்கலத்திரட்டிற் காணப் பட்டதில்லை. அதற்கு மாறு இதுவென்று கூறிக்கொண்டதொன்றே யொழிய. அந்த நூலைச் சம்பந்தியாமலே கட்டுக்கதை யொன்று புதுக்கிக்கொண்டு 0 திருவானைக்காவிலுள்ள ஆதிசைவர் கேட்டகேள் விகளுக்குவிடைபகர்வதாகவீண்வியாஜந்தொடுத்து ஆசைதீரத்திட்டி வெளிப்படுத்திய வச்சிவநிந்தையைக்கண்டு பொறாதவர்களாகிய நம் மவர் உடனே "பரப்பிரமவிளக்கம்" என்னு நூலொன்று ஸ்ரீகாளமே கப்புலவர் செய்திருந்ததை யதற்குப்பதிலாக வெளியிட்டனர். இந்த நூல், அன்னோர் மாலப்பிரபந்தத்துக்கு முற்பட்ட தொன்றாகையாற் பிந்திய வம்மாலத்திரட்டை யெடுத்துக்காட்டி முறையே பரிகரிக்க விடம்பெற்றிலது. அதனால், எங்கள் "விவேகம்" நும்ம (விளக்கத் தால்) பேதிக்கப்பட்டிலது என்றிறுமாந்து வார்த்தைசொல்லு மன் னோர் பெருமை குலையவே அவர் புன்மொழித்திரட்டை யெடுத்துக் காட்டிப் பூர்வபட்சமாக்கிச் (சிவதத்வசிந்தாமணி) என்னு மிந்த ஸித்

---

* திருவாவடுதுறைச் சிவஞானயோகிகள் செய்தது.

0 ஆதிசைவர் கிடையாது.

தாந்தநூலை யாம்செய்து வெளியிடத்துணிந்ததென வறிக. யாமிந் நூல் செய்து முடித்தது நம்மனோர் காட்டிய வவ்விளக்கத்தினுதவு கொண்டேயாகையா லவ்வாதரவுகளையு மாங்காங்கு விளக்கிக்காட்ட லெமக்காவசியமாயிற்று. இதனோடு, இன்றியமையாத வொவ்வொரு ஸித்தாந்த வசனத்துக்கும் ஸாமாந்யமாக ஸூசனையு மெழுதப்பட் டிருத்தலால், புத்திமான்க ளிவைகொண்டே யின்னு மநந்த யுத்தி களைவரித்துப் புறச்சமயிகள் வீண் புலம்பல்களைத் தடித்துச் சிவ பரத்வஸ்தாபனஞ் செய்து வருதலாகிய சிவபுண்ணியத்தைப் பரிபாலி த்து வருவாரென வவர் பொன்னடிகளை வாழ்த்துகின்றனம். "நிறுத் திடவல்லானமல னானெறியை யென்று, மறுத்திட வல்லானவலை மார்க்கமய லுற்றே, நிறுத்திலன் மறுத்தில னெனிற்கரிசன் னேச, மறுத்தவனை மாய்க்கைகரி சல்லவறமாமே" எனப் போ ந்த பிரமாணத்தையுஞ் சிந்திப்பது கடமையெனவறிக.

அச்சிட்டிருக்குநூல்கள்.

சிவாதிக்யரத்நாவளி (முதற்பாகம்.)
குதர்க்கவாதவிபஞ்சிநி.
சித்தாந்தசேகரம். } ஒரேகட்டடம்.
சமரசஞானதீபம்.
சிவபாரம்யப்பிரதரிசிநி. } ௸
பாரததாற்பரியசங்கிரக மொழிபெயர்ப்பு.
தணிகாசலஸ்தவம்.
சித்தாந்தவுந்தியார்.

அச்சிடவேண்டுநூல்கள்.

சிவாதிக்யரத்நாவளி (உ-வது பாகம்.)
ஆசாரியபிரபாவம்.
ஆபாசஞானநிரோதம்.
உத்தமவாதநான்மறுப்பு.
கைவல்யோபநிடததாற்பரியம்.
லிங்கமதகண்டந திரஸ்காரம்.
கூரோசவிஜயபங்கம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்ததீர்த்தசரணாயநமஃ.

சிவதத்வசிந்தாமணி.

(*)

காப்பு.

உலகிற்பா டண்டர்மய லோட்டிமருள் காட்டும்
கலகந் தெறச்சிவனைக் காட்டுந் - திலகமெனுந்
தன்னிக ரிலாதசிவ தத்துவசிந் தாமணிக்குக்
கன்னியுமை மூத்தமகன் காப்பு. (௧)

சமய குரவர்சைவ சந்தானத்தோர்கள்
அமையவே பாடியஞ்செய் தாரும் - உமைகொழுநற்
கன்பரர தத்தருமெய் யாரப்ப தீக்கதருந்
துன்பகலச் செய்வார் துணை. (௨)

நூல்செய்தகாரணம்.

சிவநிந்தை யேபழுத்துத் தீநரகைச் சேர்தல்
தவமென் றவமிழைத்துச் சார்ந்தே - பவமொன்றும்
போலிப்ப ரத்துவநூல் போற்றுனருக் கேயாகு
மாலிப் பரத்துவநூ லார்ந்து. (௩)

பொய்ப்பாஞ்ச ராத்திரநூல் போதநர கத்தவலர்
கைப்பா வுணர்த்துமெனக் காட்டுமால் - மெய்ப்பாக
வைதிகநூ லெல்லாமவ் வண்மையுளந் தேரவிவ
ணெய்தவுரைப் பாமிங் கியாம். (௪)

சித்தாந்த நூலிதனைச் செப்புவா மன்னோர்தங்
கத்தாகும் பூருவத்தைக் காட்டியே - வித்தாரம்
பேசுவரோ வின்னுமவர் பேச்சையெவர் கொள்ளுவரிங்
கேசுவரோ வென்று மெரிந்து. (௫)

நூல்.

பூர்வபட்சம்.

"அண்ட மளக்க வடிக்கீ ழொடுங்கியுல
குண்ட பொழுதுதரத் துள்ளொடுங்கித் - துண்டமதி
சூடினுன் மாலருளாற் ருேன்றினு னுங்கவனேத்
தேடினுன் மாலென்ப தென்." (௧)

சித்தாந்தம்.

பிரகிருதி மாலென்றே பேசுமறை யன்னேன்
பிரகிருதி யைக்கடந்த ~~பிறனுகனே~~ - நரகுறைவாய்
காண்பனே வவ்வீசன் கண்ணனடிக் கீழுமவன்
சான்வயிற்றுஞ் சாருமோ தான். (௨)

"வாசுதேவः பராப்ரகிருதிः" என்னுஞ்சுருதியையும், "யःப ரஸ்ஸமஹேசுவரः, "விசுவாதிகோருத்ரோமஹர்ஷிः" என்னுஞ் சுருதியையும் பரியாசித்தல்போதும். காளமேகர், (சங்கார காலத்திற் சம்புவன்றி மான்முதலோர், மங்கா திருந்தனரோ வாய்திறமின், அங்கயிலே, பாதத்துட் பட்டதுமால் பாரளந்தபோதென்றே, யேதத்துக் குள்ளாகு வீர்.) என்றனர்.

பூர்வபட்சம்.

"ஆவா யதன்கன்று யந்தரியா மிப்பொருளாய்
ஏவாய்ப் பவுத்தனுமா யெம்பெருமான் - காவாக்கால்
போரும் பொருமோ புராந்தகனென் றேபேருஞ்
சீரும் பெறுமோ சிவன்." (௩)

சித்தாந்தம்.

மாடாதி யாகிநெடு மாலோகாத் தான்சிவனே
யேடாகா லங்கிழுத லெல்லோருங் - கூடாநின்
றேற்ற பணிசெய்தா ரிதற்கென் பகர்வாய்கொல்
தீர்த்தனடுங் கால்புரத்தைச் செப்பு. (௪)

நகையாற் புரம்பொடித்த நம்பருக்கு நின்மால்
தகையம்பு மாடாகித் தானுந் - தொகையான

வானொரு மென்செய்தார் வல்லகோ புரந்தாங்கி
யானார்மற் றில்லை யறி. (௫)

புத்தன் பெருமையைநீ பேசினையே புத்தாநின்
னத்தனவன் செய்த வபராதம் - சத்தியமாய்த்
தீர்ந்தவிடம் பருத்திக் குன்றந் தெளியாய்கொல்
சார்ந்தானைப் பூசித்துத் தான். (௬)

மாரடாக வந்தபோது நடத்தும் பாகனிச்சையைக்கடக்கு மாற்றல்பெற வின்மையானும், இரத்தங்கான்று விலாமுறிந்து வீழ்ந்தமையானும், அம்பாகுகையி லதை எய்வோனைவிட்டுப் புடைபெயராமையானும், அசேதனத்வ மெய்துதலானும், இவ்வஸப்யப்பாடு நோக்கி னந்தரியாமித்வ மெங்ஙன மெய்துமென்னுங்கடாநிகழ்கின்றமையானும், புத்தனுகுகையில், சிவநிந்தையாலீட்டிய பாவமேறினமையானும், அப்பாவம் இருப்புமலையொன்று தலையிலேற்றினுலென்னப் பாரமாகவிருக்கினமையானும், பின்னர்ச் சிவக்ஷேத்திர யாத்திரைமுகத்தாற் பாரங்குறைந்து பருத்திமலை யேற்றினுலென்ன வாயினமையானும், அவ்வநுக்கிரகப் பேறெய்தப்பெற்ற தானம் திருப்பருத்திக்குன்றமென விளங்குகின்றமையானும், இப்படியே பிறதேவரிடமுங் காண்கையானும், புன்னகைமாத்திரத்தானே திரிபுரந்தகிக்கப்பட்டமையானும், (வல்லகோபுரந்தாங்கியானார்) என்பது நிலையுதல் பெறும். (காளமேகர்) "கந்தமலர்ப் பிரமன் காமனெனு மிரண்டு, மைந்தர் தலையுடல்போய் மாய்ந்தநாள் - வந்துதவி, செய்யா திருந்ததிரு மால்காத்தற் கேதுசொன்மின், பொய்யாய நூல்போற்று வீர்." என்றனர்.

பூர்வபட்சம்.

"அந்த வரனே யநுமானாகப் பிறந்து
சந்ததமும் வாகனமாய்த் தாங்கியதை - யிந்தவுல
கெல்லா மறியமா லேறுனு னென்பதென்னே
கல்லா மடமாந்தர் காள்." (௭)

சித்தாந்தம்.

சிவனநுமா னாகச் செனித்தகதை ராமன்
மவறில் பெருஞ்சரிதை தன்னில் - தவமில்லாய்

வான்மீகி சொல்லும் வசனமேதோ காட்டாய்
வான்மீகி நீயோ வழுத்து. (௮)

மாடாகி மால்சிவனை வந்துகாத் தானென்ற
மூடாகொள் ளாததேவன் முன்மாலை - நாடாளச்
செய்தா னநுமனெனச் செப்புவையே வேறாகப்
பொய்தான் பொய்தான்சுத்த பொய். (௯)

அநுமான் சிவனென்று வான்மீகிபகவான் கூறிற்றிலர். பாட்டிக்கதையாக மூடர் வழங்காநிற்பர். வேறுநூலாற் கூறுதுமெனின், வான்மீகிபகவான் கூறாதுவிட்டமைக்குக்காரணம்வேண்டும். விண்டுவுக்குள்ள வுயர்வைவிட்டுவிட வேதுவென்னை? இழிவையோர்போது கூறாதுவிடறகுமன்றி யுயர்வங்ஙனம் விடற்பாலதன்று. இப்படியே முற்றும் வான்மீகபகவான் வாக்கைப் பிரமாணமாகக் கொள்ளுங்கால் சிலவிடங்களிற் சிவாபகர்ஷ முண்டாகுமேயெனின், அவர்வாக்கிலோர்போதுஞ் சிவாபகர்ஷமுண்டாவதில்லையெனவறிக. விஷ்ணுவபகர்ஷங் கோடாநுகோடியுள. (இராமாயண தாற்பரியசங்கிரகம்) என்னுந் தீக்ஷிதஸ்வாமிகள் நூலாற்கண்டுணர்க. (அதிகமான ருத்ர னங்கிசனநுமசீலன்) என விராமாயணகீர்த்தனையிற்பாடிய வபராதத்தைச் சீகாழிமாந்பியத்தில், பிறந்திறந்த தெய்வப் பிணத்தைப்பாடிய பாவமகல விந்நூல் செய்யலானேனென அருணாசலக் கவிராயர் பரிகாரந் தேடிக்கொண்டனர்.

பூர்வபட்சம்.

"தூளாய்த் தலைசிதறிச் சுட்டவிடம் புன்முளைத்து
வாளாப் பெயரு மறையாதோ - தாள்வருந்த
வந்தசிவ னுக்கிரங்கி மாயவிரு காசுரனை
அந்தவரி கொல்லாவிட் டால்." (௧௦)

சித்தாந்தம்.

விருகா சுரன்கதையை மேற்கொண்டா யன்னோய்
கருகாக மால்பெண்ணே யாகி - வருமேது
வெல்லாந்தன் மூலவுருக் காணிலெரிப் பானவனென்
றல்லான்மற் றேதுரையிங் கார்ந்து. (௧௧)

ஓடியது நாடகமென் றேராய் சிவனரன்
றேடிலரோல் பொய்யாமன் றேவுதவும் - கேடில்வரம்
இன்னும் திருமாலா மேந்திழையின் பந்தினைத்துத்
துன்னுமோ காந்தனுயர் தோள். (கஉ)

"பெண்ணென்றால் பேயுமிரங்கும்" என்பதை யறிந்தே யன்றோ தன்னுயிரைக் காத்துக்கொள்ளுமாறு நாராயணர் பெட்டைவடிவத்தால் வெளியாயினர்? அங்ஙனம் வந்தபோதும் அசுரனை யஞ்சியேயன்றோ நெருங்காது தூரமாய்விட்டனர்? பெண்ணுருவத்திலு மவனை நெருங்காமையால் அவனெங்கே லீலையா யேனும் கையைத்தன் றலையில் வைத்துவிடப்போகிறானோவென்று அச்சமுற்றிடுக்கண்பட்டமையே போதராநின்றது. காளமேகர், (கஞ்சன் விடுக்க வருங் காலவெமனைக் கண்டே, யஞ்சி யொளித்திருந்த வச்சுதன்முன், மிஞ்சுபத்மா, சூரன் றனைவென்ற சூரனென்றாற் றெல்லுலகில், ஆருவகை கொண்டுநகை யார்.) என்றனர். இன்னும், "தாவுகட லமுதந் தந்திடும்போ துஞ்சாத்தன், மேவிய போதும் விரிதாரு, காவனத்தில், உற்றிடும் போதும் பெண் ணுருக்கொண்டோ னைப்புருட, வுத்தமனென் றேதலழ கோ" எனவும், "கோவிந்தன் பெண்பாலே யல்லாமற் கூறுங்கால், தாவில் புருடோத் தமனல்லன், பூவையர்போல், சீரங்க மாதி திருத்தலந்தோ றும்வலக்கைச், சாரவைத்துத் தூங்குதலாற் றான்" எனவும் போந்தமை யறிக.

பூர்வபட்சம்.

"சக்கரத்தை மிக்கமலர் சாத்தியுபா சித்ததனல்
முக்கவட்டுச் சூலமுனம் பெற்றான் - நக்கனென்று
மாமறைநூல் சொல்லவரன் மாற்கஃதீந் தானெனலென்
றுமதநூற் பொய்யறியா தார்." (கங)

சித்தாந்தம்.

இச்சைஞா னங்கிரியை யென்பதுவே சூலமதை
மெச்சுமே வேறன்றாய் வித்தகனில் - உச்சமறை
அந்தோநின் மால்கொடுத்தா னென்று லதையாரோ
மந்தாதொன் வார்சொல் மதித்து. (கச)

விண்டுவினைக் குத்தி விளையாடுஞ் சூலத்தை
முண்டையே தந்ததெவன் முக்கணனுக் - கொண்டுவரா
யானவனுக் கன்றே வளித்தார் சிவனரும்
ஆனைமுக னுஞ்சக் கரம். (கரு)

சிவனுக்குச் சூலம் விண்டுவால் கொடுக்கப்பட்டது என்னுங் கழுதைக் கதைக்கு எங்கு மாதாரவில்லையென வறிக. காளமேகர், (வீறும்விழிமலரால் வித்தகன்றாள் பூசித்துக், கூறரிய சக்கர மால்கொண்டதற்கு, மாறன்றோ, ஆலிலையிற் கண்டுயில்வோ னலமுண்ட கண்டற்குச், சூலமளித் தானென்னுஞ் சொல்.) என்றனர்.

பூர்வபக்ஷம்.

"சின்முத் திரைதரித்துத் தெக்கண மூர்த்தியென
இன்ன மரன்றியா னித்திருக்க - முன்னமரி
போதோர்கண் ணுலரனைப் பூசித்தா னென்றுரைப்ப
தேதோ சிவப்பிராந்த ரே." (கசு)

சித்தாந்தம்.

தெக்கண மூர்த்தியிடஞ் சேருமையை நீங்கியதால்
புக்கிருந்துந் தேவியிடம் போகமொழிந் - தொக்கவே
யெல்லா வுயிரோடு மீடழிந்த தென்னேமால்
வல்லாயேல் வாய்திறந் து வா. (கள)

உமையோ டிருந்துமொழிந் தும்போக யோகம்
அமைவோ டுயிர்க்கருளு மையற் - கிமையோராம்
அவ்வுயிரி லொன்றாகி யாட்டுவித்தா லாடுமரி
யெவ்விதமோ தேவென்ப தே. (கஅ)

காளமேகர், (வேதமுடி வாஞ்சிவனை வேண்டியுபா சித்ததனால், மாதவனென் றோர்நாமம் வையகத்தில், வேதன், குதத்துதித்த மாலுக்குக் கூறுகின்றார் பொய்ந்நூல், பிதற்றியுழ லும்பேய ரே.) என்றனர். "வில்லாடன்மாற னிருக்கவும்யோகம் விளைத்தவந்நாள், புல்லாதிருந்தன வெல்லாவுயிருந்தம் போகத்தையே" எனப் பிறரும் கூறினர். இன்னும் ஸ்ரீ சிவபெருமான் பாண்டியனால் பிரம்படி யுண்டபோதும், அர்ஜுனனால் வில்லடி யுண்டபோ

தும், பிராட்டியால் திருக்கண்களை மூடப்பெற்றபோதுஞ் செயலற்றுக்கிடந்த சேதனர்களு ளொருவராயினமை கண்டே (ஆட்டுவித்தாலாடுமரி) என்றதாம். இவ்வுண்மையைக்காளமேகர் கூறியபடியுங்காட்டுதும். "அரனையன்றி யேயோ ரணுவுமசையா, திருப்பதற் கம்மார னிருக்கப், பரமசிவன், யோகுசெய்த வந்நா ளுலகி லுயிரனைத்தும், போகம் மறந்த புலர்ந்து" எனவும், "தேவி யரன்விழியைச் செங்கரத்தான் மூடியநாள், மூவுலகுமுற்று மிருண் மூடியதால், தேவனொனும், பேர்படைத்தோர் யாரிந்தப் பெற்றிபெற்றார் பேசிடுமின், பார்மயக்கும் பாடண்ட ரோ" எனவும், "பிட்டுக்கு மண்சுமந்த பெம்மானைப்பாண்டியன்கை, தொட்டபிரம் பாலடிக்கத் தோன்றும்வடு, மட்டறுசீர், எவ்வெப் பொருளிடத்து மெய்திடலா லார்பரமன், செவ்வ னுரைப்பீர் தெளிந்து" எனவும், "கண்ணன் றனையுரலிற் கட்டிமணித் தாம்பினால், புண்ணுறவவ் வாய்ச்சி புடைத்தவடு, அண்மை, பொருந்தினருக்கெல்லாம் பொருந்தாமை யான்மால், பரத்துவனென் றெண்ணப் படான்" எனவும் போந்தமைகாண்க.

பூர்வபட்சம்.

"அண்டமுண்ட போதுகட லாலமுமா லத்தையுண்ட
கண்டனையுங் கூடவுண்ட காரணனை - மண்டுநெஞ்சக்
கஞ்சினதா கப்பகர்வீ ராகமத்தை நம்பிநம்பி
வஞ்சநர கில்விழுவீர் மாண்டு." (௧௯)

"மலைமடந்தை தன்கழுத்தின் மங்கலநா ணேதோ
அலைகடைந்த நாளுதித்த வாலம் - கலைகடந்த
நக்கனும் பாத்திரத்தால் நாரணனு ருள்ளமுகந்
தக்கணத்துண் ணுவிடினு வா." (௨0)

சித்தாந்தம்.

காளிக்கன் றீண்டக் கருகினு னப்படியே
நீளுங் கடல்விடத்தா னின்றிருமால் - நாளங்கே
வோயொழிந்தா னென்னவ்வவன் புன்குரம்பை தீய்ந்ததெவன்
யின்னுங் காணுய் நிஜம். (௨௧)

விடவேகத் தான்மேனி வெந்தமா ருனே
விடமுண்டா னென்பையிது வீணே - விடமுண்டே
அன்றுசிவன் காவாக்கா லற்றுவிழு மேதாலி
அன்றலர்மேன் மங்கைதனக் கால். (உஉ

பாகவதத்திற் சிவனே விடமுண்டானெனவும், அவ்விட வேகத்தை யாற்றுது விஷ்ணு முதலினே ரோடினரெனவும் பெறப்பட்டதன்றி யெல்லா நூல்களிலு மொரேபடித்தாய்க்கூறுகின்றது. விஷ்ணு விடமுண்டானென்னுங்கபோதிக்கதை யெங்கும்பெறப்பட்டதிலையெனவறிக. (காளமேகர்) "அண்டர் கடல்கடைந்த வந்நாளு ண்டானவிடம், கண்டமட்டிற் கண்ணுதலோன் கண்டத்திற் கொண்டிலனேல், அங்கமலை வாணியெனு மாயிழையார் த கழுத்தின், மங்கலநா ணேதுளைமின் மற்று" எனவும், "த கன் மகத்திறந்த தாமோதரன்மனைவி, தக்கமல ராலரன்ற ருள்பணிந்தே, மிக்கதிரு, மாங்கலியப் பிச்சை பெறவே டி வாழ்த்திடலால், ஆங்கவன்மீண் டுண்டாயி னன்" எனவு கூறினர்.

பூர்வபட்சம்.

"புக்க கருடனேயோர் புன்மசகம் வென்றதிறம்
ஒக்குங் கனகனுரங் கீண்ட - மிக்கதிறல்
ஆளரியைப் பொன்னனுக்கா யஞ்சிக் கிடந்தசிவன்
கோள்விளைத்தா னென்னுங் குறி." (உ௩

"பொன்னனுரங் கீண்டதனற் பொங்குசின மாறிற்றே
துன்னு சிவசரபஞ் சோரவுயிர் - அன்னதனைப்
பற்றி வகிர்ந்தபின்னர்ப் பாழி நரமடங்கல்
உற்ற சினந்தணிந்த தூங்கு." (உ௪

சித்தாந்தம்.

பொன்னன் றனக்கஞ்சல் போந்துநர சிங்கவுரு
மன்னியதே காட்டும் வகைதேராய் - துன்னுநரன்
சிங்கமிவை யொன்றிலுருச் சேர்ந்துவரி னன்றேமால்
மங்குவனே காணுய் மறை. (உ௫

பதைத்தா னிரணியனே வாழ்த்தி யருளா
பதைத்தா னுடன்மறந்த தாலே - பதைத்தான்
ரபத்தன் மாலென்று சாற்றுமே வேதம்
பிரதத்தார் காண வியந்து. (உ௬)

ரசிங்க வீறுவாக்க நாடுமா * லொன்று
ரசிங்க வீறடக்க நாடுமே - பரசுங்கால்
ற்றே ருபநிடத மன்னுமதன் பேர்சரபம்
பற்றுமென் மேலதற்குப் பேசு. (உ௭)

தேவர், நரர், விலங்குமுதலெவ்வகைச்சீவராசிகளானுந் தனக்கு
திற்ரணமுண்டாகாதிருக்க வரம்பெற்றிருந்தமையானும், அவனுக்கஞ்சி
தமபதுஞ்செய்ய வும்பர் முனிவர் முதல் யாவரும் வலியற்றுக் கிடந்
தமையானும், அத்தேவருளொருவராகிய விண்டுவுக்குமாத்திரமவனே
வெல்லுதல் கூடுமென்பதற்கோரோதுவும் புலப்படாமையானும், அவ்
வுண்மை போதரவே யவற்று ளொன்றினுஞ் சேராத நரசிங்கவடி
வத்தை யவ்விண்டுவெடுத்தமையானும் பொன்னனுக்கவ்விண்டு வஞ்
சிக் கிடந்தாரென்பது நிலையுதல்பெறும். அஞ்சினதில்லையெனின்,
ரவடிவும், விலங்குருவுங்கலந்து வெளிப்படலாவசியமின்று. யாவரா
லும் வெல்லக்கூடாத தன்மையால் சிவனுக்கு மது சேருமெனின்,
சேராது. சிவன் தேவரு ளொருவ னல்லாமையானும், (சிவனுருவ
ருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன்) என்ற விலக்கணமுடை
யானுகலானும், தேவர், நரர், முதலிய பசுவர்க்கங்களால் வெல்லக்கூ
டாமையே யவன்பெற்றவரமன்றிப் பசுபதி ஸம்பந்தமொன்றும் பிர
ஸ்தாபமின்மை யானுஞ் சிவன்மாட்டு மவ்வஸப்ய மேறுமென லமை
யாது. "கனக னுரங்கீண்ட காலத்திற் போர்வில், லநகனுடல்
செற்ற வரனுர் , தனியுலகிற், பெற்றிகொளுஞ் சரபப் பேரு
நக்கொள் ளாவிடின்மால், செத்தவிடம் புல்செழிக்கு மே."
என்ற காளமேகர் வாக்குஞ் சான்றும். பொன்னனுக் கஞ்சிக் கிடந்த
வார்தெய்வம் சிவசரபத்தைத் தன்சிங்கவுருவால்வென்ற கதையை
நருவுக்குக் குதிரைமுட்டை வாங்கிக்கொடுத்தமாணுக்கரோ)
ப்பவேண்டியது.

---

* நாரசிங்கோபநிடதம்.

பூர்வபட்சம்.

"இந்திரன்செய் வேள்விக் கிடரிழைக்க வென்னுமரன்
ஐந்தலையு மற்றுவிழ வாழியினால் - முந்தரிந்த
அச்சுதனை மைந்தரொடு மம்பிகையாள் வேண்டிடலும்
அச்சிவன்பெற் றானுயிரை யன்று." (உஅ)

சித்தாந்தம்.

மகவான் மகந்தன்னின் மாய்ந்தான் சிவனென்
றகம்பேசி னாய்மால்கொண் டட்தோ - சகமேவக்
காட்டுதியோ வேதத்திற் * கண்டபடி யேபொருள்கொள்
ளட்டுதியே பாவ மிசைந்து. (உகூ)

ஒன்னார் சிதலுருவா யொள்ளியவின் னாணியறுத்
தன்னோ சிரத்தையரிந் தார்கான் - முன்னோன
மானோனை நின்கண்ண மங்கையெனு மப்பதியி
லூனார் தலையுருண்ட தோர். (௩௦)

செத்ததுக்கத் தாலழிந்து சீதேவி தன்கணவன்
பித்தனருளாலே பிழைப்பா னென் - றத்ததியே
செல்வத் திருவாரூர்ச் சென்றுபணிந் தாளதனான்
மல்லல்பெற வந்தானின் மால். (௩௧)

கமலையருச் சித்திட்ட காரணத்தா லன்றோ
கமலா லயப்பேறாக் கான்பேம் - கமலையவள்
தன்கழுத்தி லேதோதான் றாலியரன் றானேல்
புன்கழுகே யென்சொல்வாய் போந்து. (௩௨)

பூர்வபட்சம்.

"கேட்டு மறியீர்கொல் கிளர்சடையோன் வண்காசி
நாட்டிறப்போர் தம்முயிரை நற்கதியிற் - கூட்டல்

---

* உருத்திரசேடமாயுள்ள யஜ்ஞத்தையுருத்திரமென்று வேதங் கூறும். இன்னும் உருத்திரம் என்று சுரத்துக்கும், உருத்திரனென்று அக்கினிக்கும் பெயர் வழங்குமாறு கற்றவர்பாலறிந்தடங்குக. இதனை யறியாது ருத்ரசப்தத்தால் வந்த வபகர்ஷத்தைச் சர்வ வேதாத்மக ராகிய சிவனிட மேற்றியது அஸாமஞ்சஸமென வறிக.

தயரத குமாரன் றனிப்பெய ரன்னோர்க்கு
வயமுறப்போ தித்தன்றோ வாய்ந்து." (௩௩)

சித்தாந்தம்.

காசிப் பதியிலிறப் போர்முத்தி காணலுய
ரீசன் பிரணவத்தி னலென்றே - பேசுமறை
யென்னே நதியிலிழந் திட்டவிரா மன்பேராய்ச்
சொன்னயிங் கார்கொள்வார் சொல். (௩௪)

மாலிடத்த வெள்ளை மயிரா மிராமனையும்
மாலடுத்து மாதாவை மாளவே - மேலெடுத்த
வென்றிபர சாற்கொன்ற வீரனையும் விட்டனையே
நன்றிதுகாண் மிக்க நகைப்பு. (௩௫)

நின்மா விராம நிஜமந் திரத்தாலே
யென்மா தவன்காசி யின்கண்ணே - நன்மோக்க
மீவனென்று லென்னே யெழில்சிவரூ பங்காண்டல்
ஆவதென்னே மேலிங் கறை. (௩௬)

காசியிற் சிவன் விண்டு மந்திரத்தை யுபதேசிப்பா னெனின், அதன்பேறு சிவசாரூப்பிய மாதற்குக் காரணமுரைத்தல் வேண்டும். ஸ்ரீகாஞ்சியின்கண்ணே விண்டுவுக்கு ஸ்ரீஸம்பந்ததீர்த்தரச் சிவசாரூப்பியத்தைப் பிரஸாதித்த பெற்றியு மெணத்தெனக் காணல் வேண்டும். விண்டு மந்திரம் சிவன லுபதேசிக்கப் படுமெனின், காசியில் விண்டுவுக் காதிக்கமொழிந்து சிவனாட்சியே யினிது தழைத்திருத்தற்கு மேது விசைக்க வேண்டும். காசியில் விளங்குந் தெய்வம் ஸ்ரீவிசுவநாத னெனல் வேதப்பிரஸித்தம். (காளமேகர்) "வாரணவாசி மருவியகங் காநதியின், மாரணர்கள் வெள்ளிமலை வாழ்வுபெறல், சீரார், பிரணவத்தா லன்றோவிப் பெற்றியுணராது, முரணனுகச் சொல்வீர் முனிந்து" என்றனர். இன்னும், "ஒருமிலங் கைக்கோ னுதவியசேய் வஞ்சகமா, வாதைப் படுத்தவெண்ணி யேமாயா, சீதையெனும், கூரா மயில்விழியைக் கொல்ல பார்த் தேயழுத, சிராமன் ருனேநந் தே" எனவும், "ஒருமிலங் கைக்கோ னேங்குவெள்ளி வெற்பைமுனம், போத வெடுக்கப்

புராந்தகன்றன், பாதப், பெருவிரலா லூன்றவங்காட் பேதுற்ருேன் றன்னைச், செருவினிற் செற்ருேன் றேவனே" எனவும் கூறிய படியறிக.

பூர்வபட்சம்.

"செய்தவங்கள் செய்து சிவனுயி ஞனைநீர்
எய்த மகேச்சுர னென்றேத்தல் - வைதசிறு
புன்கள்ளி தன்னைப் புவியின் மகாவிருக்கம்
என்கையொக்கு மொக்குமே யிங்கு." (௩எ)

சித்தாந்தம்.

தவஞ்செய்து மாதவனுந் தக்கபெயர் நின்மால்
தவஞ்செய்யாய் பெற்றதனைச் சாற்ரு - தவஞ்செய்தாய்
கேடா மகேச்சுரப்பேர் கேட்டனையோ வேதத்தில்
மூடாமா லுக்குனையென் முன். (௩அ)

சிவனு மாலைச் சிரிப்பன்ருே வீசனெனல்
தாவு மகேசனென ருனுமே - மேவுமோ
பேதாய் பரமேசப் பேருஞ் சிவனுர்க்கே
யோதாய் வேதத்தை யுணர்ந்து. (௩௯)

எங்கண் மகேசுரனுக் கெய்துஞ் சிவநாமம்
பங்கநாமம் போட்ட பாவியே - நுங்கரியோற்
கெப்படியுண் டாகுமவற் கெல்லா மமங்கலமே
செப்புவையோ வென்முன் செறிந்து. (௪0)

காளமேகர், (மாண்டு பிறந்துழலு மாதவனை யச்சுதனென், றீண்டுசொல லாடஜப்பே ரெய்தல்போல், பூண்டினுக்குள், அற்ப மிகு முள்ளிதனை யம்புவியின் மேன்மைபெறு, கற்பகமென்றே கழற னோர்) என்றனர். இன்னும், "ஏர்பதரி யாச்சிரம மெண்ணரிய மைந்நாகப், பேர்கொண்மலே மேவிப் பிஞ்ஞகன்றன், சீர்படித்து, வைகுந் தவப்பயனு லன்ருே மலர்த்துளவோன், வைகுந்தம் பெற் ருன் மகிழ்ந்து" என்றபடியுங் காண்க. அன்றியும், (எல்லாமமங் கல) மென்றதை, "நெடுந்துயில்வஞ்சஞ்சோம்பு நீதிவழுபேருண், கடுங்கோபம் பொய்ம்மறதி காமம், உடலம், கரியநிறங்களெங் கலங்

திருத்தலாலே, அரிதாமதகுணத்த னும்" என்ற பிரமாணமேநிறு த்தும். அமங்கலனாகிய விண்டுவின்பெருமையும், மங்கலனா கிய சிவன் பெருமையும் பின் வெண்பாக்களால் வெளிப்பட்ட வாறறிக. "அகஞ்சத்துவம்புறத்தாந் தாமதமுக்கண்ணற், ககந்தா மதம்புறத்தாஞ் சாந்தம், புகலரிக்கென், றுத்தரராமாயணமே யோ து தலால்வேறுமோர், உத்தரமின்னும் வேண்டு மோ" எனவும், "பொறைஞானம் வாய்மை பொறியடக்கன் மேன்மை, நிறைமோ னம் வெண்மை நிறமே, பெறுஞ்சுத்த, சத்துவத்தின் மெய்ப்பொ ருளாய்த் தானே சுயம்பதனல், சத்வகுணஞ் சங்கரனே தான்" என்பவையவை.

பூர்வபட்சம்.

"ஒருகத்தி னூருவினி லோருகத்திற் பூருவிலம்
போருகத்தன் பாற்பிறந்த போழ்ததனில்-கார்நிறத்த
கண்டத்தான் ரோதனஞ்செய் காரணத்தால் ருத்திரனென்
றுன்றட வ நூல்க ளுரைக்கும்." (சக)

சித்தாந்தம்.

எங்கோன் சிவனொருவ னென்றேழும் மூர்த்திகளிற்
சங்கேதங் கொண்டாய் சவமேநின் - சங்கேத
மெய்யோ வொருமூவர் மேனுளுதித்த தெவண்
ஐயோகா ணுயவ் விடம். (சஉ)

கஞ்சன்மண்ணு மன்ணிற் கண்ணுதலோ னங்கியவன்
வஞ்சனே தோற்றும் வகைசொல்லாய் - கஞ்சன்
குதத்திலே தோன்றியமால் கூறுபர னென்றே
பிதற்றுவதென் பேதாய் பிறழ்ந்து. (சஙு)

அழுதா னுருத்திரனென் றுய்மாலின் றுன்பப்
பழுதா லிரங்குதலும் பாங்காம் - அழுதானே
வேறொருத்தன் பெண்டை விரும்பியிடு காட்டிலிதை
மாறுனைத்தாய் நீயே மதி. (சச)

எம்மா னுருத்திரனென் றேத்துமே நான்மறைக
ளம்மான் முதற்பசுக்க ளாமவருக் - கிம்மாய

வஞ்சநெ் தெறத்துன்பம் வாட்டியருள் கூர்தலினல்
நஞ்சமயின் ருேனே நயந்து. (சரு)

"பிறப்பில் பெருமானைப் பின்ருழ் சடையானே" எனப் பரமாசாரியர் வாக்கிருத்தல் காண்க. பிரமனிட மவனுக் குபதேசிக்க வேண்டித்தோன்றியபேர் ஏகாதசருத்ரர், சதருத்ரர், சகஸ்ரருத்ரருட் சேர்ந்தவராதல்காண்க. பிரமனிட முருத்திரன் பிறந்தழுதான். பிரமன்மகனே யேனழுகிருயென்றனன். நான் பாவியாயிருக்கிறே னெனக்கு நல்ல நாமங்கொடுமென்றனன். அப்போது பிரமன்பவன், சர்வன், உக்கிரன், பீமன் என்பனவாதிநாமங்களை யிட்டான் எனப் பாஞ்சராத்திரிகள் கூறித்திரிவர். பாவத்தைப் போக்கத்தக்க பரிசுத்த முடைமை யந்நாமங்களுக்கு முன்னரோ யவற்றை யுரிமையாகவுடைய தெய்வத்தி னேற்றத்தாலேயே யுண்டாயினமை பெறப்படலா லத்தெய்வந்தானன்ருே திரிமூர்த்தி யுத்தீர்ணரான ஸ்ரீபரமேசுவரனென வித்தாந்திகள் கூறுவர்? அந்நாமங்கள் பரம்சிவனுக்கேயன்றி விண்டு முதலினோர்க்கு வேதத்திற் கேட்கப்படாமையானும், நாராயணன்-தாமோதரன்-இத்தியாதிநாமங்களைப் பாவத்தைப் போக்கும் பரிசுத்தமுடையவனவாக வப்பிரமன் றெரிந்தெடுக்காமையானும் பிரமனிட முருத்திரன் பிறந்த சீர்ப்பாடிணைத்தென வெளிப்பட்டது. (காளமேகர்) "கற்பமொன்றிற் கண்ணுதலோன் காவிற் பிறந்துமறு, கற்பத்திற் கஞ்சன் குதத்தினிலே, யுற்பவித்த, அச்சுதனைக் கண்ணனென லம்பகப்பூ வாலரனை, யர்ச்சித்த காரணத்தினல்." என்றனர்.

பூர்வபட்சம்.

"ஞான மறையை நவின்றுரைக்கும் போதெல்லா
மானமுறை யாலாதி யந்தத்தும் - ஊனமற
அந்தணர்க ளென்போ ரரியோ மெனுஞ்சொல்லைத்
தந்துரைத்தல் கேட்டிலிரோ தான்." (சசா)

சித்தாந்தம்.

விதியுண்டேல் காட்டாய் விளம்ப வரியோமென்
றெதிரின் மறைமுதலோ டீற்றில் - பதிதனே
யோதும்போ தெல்லா முயர்மறையை யோமென்றே
யோதவே யோதுமறை யோர். (சஎ)

காளமேகர்;—(வேதபா ராயணஞ்செய் வேதியர்க ளாதியந் தம், ஓதும் பிரணவமே யோதுகின்றார், மாதவத்தோர், எண்ணும் பிரணவத்திற் கேனரியென் னும்மடைச்சொல், மண்ணணிந்தீர் கொண்ட வழக்கு.) என்றனர்.

பூர்வபட்சம்.

"பிருகுகோ தமன்முன் பெருஞ்சினங்கொண் டின்பம்
பருகுமையீ சன்குறிகள் பாரில் - அருகிவிழ
இட்டசா பத்தினு விட்டகுறி யென்றோதும்
இட்டதெய்வ மாயிருத்த லீங்கு." (சஅ)

"கையிருக்கக் காலிருக்கக் கண்ணிருக்க நக்கனுக்கு
மெய்யிருக்க வன்பா விரும்பாதே - வைதுவிழும்
ஆண்குறியைப் பூசித் தழிவதெல்லா மாயவனே
வீண்குறியாப் பேசும் வினை." (சகூ)

சித்தாந்தம்.

பிறந்துழல மாலுக்குப் பேதாய் பிருகு
மறந்திகழுஞ் சாபம் வகுத்தான் - மறந்தனேயோ
மண்பூசி நெற்றியிலே மாட்டுதியே சுட்டையுடல்
வண்கோ தமன்சாபம் வாய்ந்து. (ருo)

ஏனே பெருஞ்சாப மிட்டார் முனிவரொன
வானூர்தி யைப்பழிக்க வாசையே - சீகாயே
மின்மினியோ வெய்யோனே மேல்விழுந்து காயுமுனக்
கென்மதியோ போகரகுக் கே. (ருக)

சாளக்கிரா மத்தைச் சற்றுநிதா னித்துப்பார்
நீளப் பகக்குறியாம் நின்மாலே - யாளத்தான்
வந்த சிவன்குறியா வைதாயி லிங்கத்தை
யெந்தநர கைப்பெறவோ வீங்கு. (ருஉ)

மாலு மிலக்குமியு மாதே வனையிலிங்கத்
தேலவருச் சித்திடுத லேத்துமே - நாலுமறை
அந்தோ சிவன்குறியைத் தானே வவர்விரும்பித்
தந்தார்மெய்ப் பூசையுறத் தான். (ருங)

காளமேகர்,—(காலொடுகை யுஞ்சிரமுங் காட்டகத்தே வெந்தபிண, மாலைச் சகநாதம் வைத்தேத்தல், சூல, மழுப்படையான் பாதம் வழுத்தாதெந் நாளும், பழிப்பதனால் வந்த பவம்.) என்றனர்.

பூர்வபட்சம்.

"வேதியர்க ளாய்ப்பிறந்தும் மெய்யிலிலிங் கப்பொறுத்தும்
பூதியரன் கண்மணியின் பூணணிந்த - பாதகரை
நீதி யரசன்ற னிலத்தின் புறம்விடுக்க
வோதிடுமே நூல்க ளொருங்கு." (ருச)

சித்தாந்தம்.

ஜாபால மாதிகளிற் சாற்றுமே நீற்றையெழிற்
* கோபால மாமணியுங் கொண்டிடவே - காபாலி
யெங்கோ னிலச்சினையா மீதுணாநின் மண்ணைவியந்
தெங்கேவே தத்திலெடுத் து. (ருரு)

வெள்ளைமண் யோனி விரிபுலன் டரந்தாங்கி
யெள்ளுவது நீற்மையுனக் கேற்குமே - விள்ளுங்கா
லேத்துந் ததிசிமுனி யிட்டசா பங்கண்டாய்
கார்த்தபமே சும்மாநீ கத்து. (ருசு)

காளமேகர்;—"தம்முணர்ந்தோர் நீறுநுதற் சார்பின்றி யேயணிவர், தம்முணரார் மண்குழைத்துத் தந்நுதலில், தம்மறிவோர், ஆடியுளே நின்றுங் கறிவித்த பின்னரன்றோ, நாடி யிடுவர் நயந்து" எனவும், "உற்றநெடு மாலடியை யோது மவனடிமை, பெற்றவர்க ணெற்றியிடல் பெற்றியே, மற்றவன்றன், பாதமவன்றனது பாலத்திடுவதென்னோ, பாதகஞ்செய் பாடண்ட ரே." எனவும் "நீறில்லா நெற்றிபா ழென்றவ்வை நீதிநூல், தேற வுரைத்தாளச் சீர்மையினை, னீறென்றே, நற்கருமத் திற்காகு நாமங் குழைத்திடுதல், துற்கருமத் தோர்செய் தொழில்." எனவும், "எற்றுனை யாழ்வா ரியம்பியநா லாயிரத்துள், நீற்று னெனவுரைத்த நேர்மைபோல், வேற்றுமையின், றேதிடுநா மத்தானென் றேனுரைக்க வில்லையெனில், ஆதிசைவன் மாலாத லால்." எனவும், "மோசப்பட் டானொருவன் மோசஞ்செய்

* கோபாலமணி-நெற்றிக்கண்மணி.

தோற்கண்டு, பூசப் படாநாமம் போட்டனையென், றேசுமொழி, வையப் பாவாணர்களு மற்றவரும் பாராட்டல், ஐயப்பா டேணறிவி லீர்." எனவும், "அடகோவென் றேபுலம்பு மைய வுனக்குச், சட கோப மார்தரித்தா ரொன்றே, யடைவாகத், தொல்லாழி சூழ்புவியோர் தொன்றுதொட் டேசுமொழி, கல்லா திருப்பதென்ன காண்." என வும், "அருத்திகொளத் தாசர்க் கடலாழி சங்கம், நெருப்பிட்டிருதோ ணிறுவ, வெருக்கொண், டுளப்புழுங்கும் போதி லுனாக்குமந் திரங்க, ளுளம்புகுமோ சொல்லீ ருவந்து." எனவுங்கூறினர்.

பூர்வபட்சம்.

"சத்திரயா கந்தன்னிற் றக்கன் பிருகாற்கு
வைத்தகொடுஞ் சாபத்தான் மாமறையோர் - இத்தலத்தில்
சங்கரனின் மாலியமுந் தானுகந்த போனகமும்
அங்கி கரியா ரறிந்து." (ருஎ)

சித்தாந்தம்.

நின்மா லியப்பகுதி நீயோ வறிந்திடுவாய்
துன்மார்க்கம் பேசத் துணிந்தனையே - சன்மார்க்க
மில்லாய் நிவேதிதமே யேற்குமிதன் வேறான
வெல்லாங் கொள்ளாந்தோட மே. (ருஅ)

பிராமணர்க ளுச்சிட்டம் பேதாய்மன் டோண்டியிடல்
பிராமணரைக் கேட்டறிந்து பேசாய் - பிராமணருஞ்
சம்புவினின் மாலியத்தைச் சார்ந்துண்ணார் காலத்தால்
பம்புமறை யோர்விதியைப் பற்றி, ... (ருசு)

அந்தணர்கண் மாலா மரசனுச் சிட்டமதை
யெந்தவிதி யாற்கொள்வ ரேற்குமோ - அந்தணர்க
ளெல்லாரோ கொண்டிடுவ ரந்தோ மறைவிதிக்கும்
பொல்லாய்நில் லாதென்முன் போ. (சு0)

சிவாதிக்ய ரத்நாவளி முதற்பாகம்-இரண்டாம்பாகங்களில் பர க்கக்கண்டு தெளிக.

பூர்வபட்சம்.

"மேற்கனநூல் பல்சமய முன்னியற்றுந் தீயவினை
போகநறு நாவலின்கீழ்ப் போந்துமையாள் - பாகனன்னீர்

பம்புசி ரரங்கற் பணிந்துதவஞ் செய்ததன்றே
ஜம்புகே சுரப்பேர்த் தலம்." (சூக)

சித்தாந்தம்.

ஆடின னென்றே * பொன் னஃதே திருவரங்கம்
நாடியரன் முன்பாக நண்புகூர்ந் - தாடிடவே
செய்தானின் மாலுஞ் சிவனுமருள் செய்தானே
வைதாலென் கண்டாய் வரும். (சூஉ)

றின்மால்பா டண்ட நிறுவினு னென்பதனை
யென்மேற் பழிகூற லேற்குமோ - கன்மாலன்
றன்னேன் றடிப்புத்த னுனகதை நீயன்றே
சொன்னுயென் முன்றேன்றி பே. (சூங)

காளமேகர்;—(பாடண்ட மோகளநூல் பார்மயங்கச் செய்திடுமால், தோட மகலவில்வ நீழறுன்னி, மூடிகத்தை, யூர்ந்தோனடியை யுபாசித்த காரணத்தாற், சார்ந்தது சீரங்க தலம்.) என்றுகூறினார். "ஈங்கு வாழ்தலே யன்றிமற் றிலங்கையிற் படரோன், றீங்கிலாநட் மிலக்குமி செய்யுமா றியக்கி, யோங்கு நாவலி னொருவனுர் திருவருள் பெரிதுங், தாங்கு மார்வமுந் தழுவிய நெஞ்சினேன் கண்டாய்" எனவும், "திருவின் மாதரா ளுடகஞ் செய்யுமித்தானத், துருவமாநக ரொன்றுசீ ரங்கமென் றுளதா, மருவுசீரங்க நாதரொன் றெமக்குளை வழங்கும், பொருவில் பூசனை விழாமுத லெமக்கிவட் பொலியும்" எனவும் விபீடணனைநோக்கி விண்டுமூர்த்திகூறிய வுண்மைதிருவானைக்கா மாங்மியத்திற் போந்தமை யறிக.

பூர்வபட்சம்.

"பொன்னிலங்கு மெய்யன் பொருவலிசேர் வாலியொடு
தென்னிலங்கை கோமான் றிறல்வாணன் - முன்னரனைத்
தாழ்ந்து பெறுவரத்தைச் சாற்றிடலும் வேண்டுமோ
வாழ்ந்துவிடிங் திட்டினரோ வாய்ந்து." (சூச)

---

* இலக்குமி.

சித்தாந்தம்.

ஆடகமெய் யான்வான ஞதிபனா மால்வென்ற
தேடலர்கோன் றைத்தாரா னின்னருள்காண் - மூடவுனா
செய்தா யறியாமல் சிற்றறிவி னுயந்தோ
எய்தான்கோ லாய்மாலே யே. (௬௫)

வாலி யெனுங்குரங்கை மால்வென்று னென்பையவன்
மேலடைந்த சம்மதத்தில் வேடுவனாய் - சூலியருள்
பெற்றுனே மால்வீழப் பெய்தான் சரமொன்றை
யெற்றேநின் மால்வெற்றி யீங்கு. (௬௬)

காளமேகர்;—"மலையா யணுவாய் மகிமுதலாய்த் தானுய், நிலையாய மெய்ப்பொருளாய் நின்ற, மலைவில்லான், றன்னுபதே சத் தன்றே தாசரதி யன்றிலங்கை, மன்னனைமாய்த் தானென்னு மாண்பு" எனவும், "ஈருருவ மொன்று யிருத்தலா னுனேநீ, தாருரத் திற்பூண்டு சமர்செயிலோ, யாரறிய, வாலிமடிய வதைத்திடுவே னென்றுரைத்த, மாலறிஞ னுவனே மற்று." எனவும், "மாயன் மறைந்திருந்து வாலிதனைக் கொல்லவவன், றூய வனசரனுத் தோன்றியந்த, மாயவனைக், கொன்றகதை பாரதத்திற் கூறக்கேட் டீரிலேயோ, பொன்றிடுமா லைப்புகழு வீர்" எனவும், "பைந்துளவத் தோனைப் பரத்துவனென் றேயரிய, விந்தைமகத்தில் விரைந்தழைத்தே, சந்ததமும்,தாழ்ந்த சடைவியா தன்றக்க னெனுமிருவர், வாழ்ந்தனரோ வைய நக." எனவுங்கூறினர். அன்றியும், "வேதந் தவமுனிவோர் விண்ணோரைச் சாட்சிகொளா, தேத மிருகத்தோ டிராக்கதனை, மேதினியில், சான்றெனவே கொண்டந்தோ சாதிப்பீர் நால்வேத, மூன்றியறி யாவுணர்வி னீர்." எனவும், "கருங்கல்லிற் றேரை கலந்திருந் தாற் போலப், பெருங்கம்பத் துண்மால் பிறத்தற், கிரும்புவியிற், சின்னஞ் சிறுசேயைத் தேடினீர் சான்றுக, வென்ன மதிகொண் டோ வியைந்து" எனவும், விஷ்ணு பிரஸாதம்பெற்றோர் சிறுமையெடுத் தோதினமையு மறிக. இவ்வுண்மையைப் (பசுசிசு கவதா ராக்ஷஸாஸ்லாகூதிணோா) என்று தீக்ஷிதஸ்வாமிகள் வெளிப்படுத்தி னமையானுங் கண்டுதெளிக. மேல் விஷ்ணு வாதிக்கங்க ளெல்லாஞ் சிவனுலும், சிவபிரஸாதம் பெற்ற

வடியவராலுமே மாட்சிபெற்றன வென்பதைப் பின்வெண் பாக்கள் காட்டும். அவைவருமாறு. "சாபமடைந் ததனிச் சக் கரத்தால் வெய்யோனைச், சீபதிமுன் ஞண்மறைத்த தோர்சிறப் போ, மாபுகழ்சேர், செய்ய நளாயினியாற் செங்கதிர்பன் ஞண்ம றைந்த, தையமற யாவ ரறியார்" எனவும், "துருவாசன் சாபத் தொடர்பிறு லாழி, யிரவி தனைமறைத்த தென்றே, புனைசெயுமே, நான்மறையை நன்குணரு நுண்ணறிவி லீர்வாளா, மான்மறைத் தா னென்பீர் மயங்கி" எனவும் போந்தவற்றால் சிவப்பிரஸாத மடைந்த துருவாசர் மகிமையும், நளாயினி மகிமையுமே வெளிப்பட்டன. "அகலிகையைக் கல்லா வமைத்த முனிவன், புக ரில் விமோசனமப் போதே, புகன்றிருக்க, கல்லுருவைப் பெண்ணு ருவங் காட்டினன் மாலென்றே, சொல்லும்வகை யேதோ துணி ந்து" என்பதனாலுங் கவுதமராகிய சிவனடியார் மகிமையே வெளிப்பட்டது. இனிப், "பாஞ்சாலிமுற்பிறப்பிற் பண்ணவனூற் பெற்றிட்ட, வாஞ்சீர் வரத்தான வைதனிலே, வாஞ்சையுற, மாளா த் துகிலவட்கு வந்ததைமா லீந்ததென், வாளா வுரைப்பீர் மகிழ்ந்து" என்று ஸ்ரீசிவபெருமான் பாஞ்சாலிக்கு நளாயினியான முற் சநநத்திற் பிரஸாதித்த மகிமாதிசயமே கூறினமை யறிந்தி டுக. இன்னும், பாஞ்சாலி யோர் சிவனடியாருக்குக்கோவண மோர்காலத்திலுதவி, அவர் மானத்தைக் காத்தனளென்பது மே யன்றோ வவளுடைய மானங்காக்கப்பட்டதற்குப் பிரதி யாக வம்முனிவர் பிரஸாதித்தருளினரென்று மேலோர் கூறு நிற்பர்?

பூர்வபட்சம்.

"யாருமறிய வெசுருவே தாரணமெய்
யாருமொழி யாளனென வாய்ந்துரைக்க - வோர்வின்றி
வேத வியாசன்பொய் விளம்பக் கரந்தம்பித்
தேதமுறு நின்றதென்ப தென்." (சுஎ)

சித்தாந்தம்.

போய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயப்பினென நாயனர் - சொன்முறைதேர்ந்

தோதினன் மால்பரனென் றேர்புளகை மாலேவந்
தோதுவான் வாய்மையென வோர்ந்து. (௬அ)

இன்னஞ் சிவநிந்தை யேற்றுவார் தண்டமுறல்
தன்னிடங்காட் டத்துணிந்த தன்மையால் - அன்னவன்கை
தம்பித் ததுநந்தி தண்டித்தான் மாலுநனி
நம்பச்செய் தான்சிவனே நாடு. (௬௯)

காளமேகர்;—"பங்கயக்கண் மாலைப் பரத்துவனென் றேவி யாதன், கங்கைக் கரையுரைத்துக் கைநாவன்-றங்கவற்குத், தம்பிக்க மால்வந்து சங்கரனே யெவ்வுயிர்க்கு, மெம்பிரா னென்ற னினி." என்றனர்.

பூர்வபட்சம்.

"முனிவ ரொழுவர் முதுபரா சன்செம்
பனிமலரா னுள்ளிட்ட பல்லோர் - இனிதாய்த்
திருமால் பரனென்னச் செப்பினரன் றோர்க்கேன்
பெருநாத் தம்பிக்காத பெட்பு." (௭0)

சித்தாந்தம்.

திருமால் பரனென்னச் செப்பினரோ சூளா
லொருவார்த்தை யேனு முறையாய் - கருவாதை
நீங்கும் படிமுனிவர் நின்மாலே சங்கரனுக்
கோங்குபரஞ் சொன்ன னுவந்து. (௭க)

தக்கன் சிவநிந்தை தானிழைத்தன் றேதலையை
யக்கணமே போக்கிக்கொண் டானதனல் - மிக்கசிவ
நிந்தைக் கொதுங்குவரோ நீடுமுனி வோருமெவர்
விந்தைக்கே னுஞ்சொல்லார் மேல். (௭உ)

பூர்வபட்சம்.

"ஓதுமுனி மால்பரனென் றேதமாழ் கிச்சினந்து
போதுநந்தி மாமுகத்திற் பொன்னடியால் - வாதசெய்
முன்னுதைத்தா னந்த முறைமையாற் சங்கைபெருத்
தின்முகத்தன் னேன்பிறங்க லிங்கு." (௭௩)

"மாருதிசிர் பாதமுகம் வாய்க்கப் பெறுநந்தி
சீருதவு மால்பரனைச் சிந்தைசெய்யுங் - காரணத்தால்
பேர்கங்கை மாட்டைப் பெருமாண்மா டென்னவுலீ
கோருமைப்பர் சோரா துணர்ந்து." (எச)

சித்தாந்தம்.

தாசரதிக் காவிலிங்கந் தான்வேண்டிச் சென்றநுமான்
ஈசனெதிர் நந்திக் கிகலானன் - காசியிலன்
றன்னேனை நந்தியுதைத் தானென்ப தற்கோரீ
சொன்னய்மா றுகவெறுஞ் சொல். (எரு)

பெருமாண்மா டென்றுலகோர் பேசுவது பொய்யோ
பெருமாண்மா டானமைக்குப் பேதாய் - பெருமாளா
மம்மாடு தன்னெற்றி யாரவநு மச்சுமத்த
லம்மாலைக் காத்தகுறி யாம். (எசா)

பூர்வபட்சம்.

"பிறப்பிலியாய்த் தானிருந்து பேருலகின் மாயோன்
உறப்பிறக்கு மென்றுமறை யோத - மறுத்துநீர்
அச்சுதனைச் சாதமுடை யானென் றறிவிழந்து
பிச்சரிற் பிதற்றுவதென் பேச்சு." (எள)

சித்தாந்தம்.

பிறப்பிலியோ பேதாய் பிறக்கும்பல் யோனி
யிறப்பிலிதா னிங்கே னிறக்கும் - மறப்பிணமா
யன்றுசுட்ட தின்று மகப்படுமே மாயனுட
லென்றுஞ் சகநாதத் தேய்ந்து. (எஅ)

மரிக்கும்பொய்த் தேவர்களை வாழ்த்துமே வேதம்
சிரிக்க வமரரெனச் சேர்ந்தே - அரிக்குமது
போலன்றோ வச்சுதநா மம்புகலுங் கண்டாய்நின்
மாலன்றோ மாலை மதித்தல். (எகூ)

பூர்வபட்சம்.

"ஆய வறத்தை யறவோரா யாக்கவும்வெந்
தீயர்தமைப் போக்கவுமே திண்புவியில் - மாயுகங்கள்

தோறுமுற்ப விப்பனெனத் தொல்கீதை யிற்கண்ணன்
கூறுமொழி தேர்ந்திலிரோ கூர்ந்து." (அ0)

சித்தாந்தம்.

அறவோரா யாக்கி யஃதல்லா ரைப்போக்க
லறமாகு மெம்பெருமாற் கன்றே - அறமில்லாய்
கீதையிலே கண்ணன் கிளத்தியது ஸோஹத்தா
லீதுணர்தி கண்டா யிசைந்து. (அக)

சீதைகொழு னன்மகிழச் செப்பினன் சம்புவுயர்
கீதையதைத் தானன்றோ கேட்டபடி - வாதைகெடக்
கண்ண னருச்சுனற்குக் கற்பித்தா னீதறியா
தெண்ணுவதென் வேறு விசைந்து. (அ௨)

கேட்டதிலே யோபிரம கீதையது வும்ஸோஹ
நாட்டமுற லாலெல்லா நானெனவே - நாட்டுமே
பிரமன் * பலபேரும் பேசுவர்கா ணீதே
அரனுக்கன் பாகி யணைந்து. (அ௩)

காளமேகர், (ஆயவமர ரறவோரைக் காக்கவும் வெந், தீயவ சுரர் தமைச் செற்றிடவும், தூய, விதிமா லுருத்திரனே வெள்ளிமலை நாதன், உதவினனென் றோதுமறை நூல்.) என்றனர்.

பூர்வபட்சம்.

"உடையானுக் கன்றி யுடைப் பொருளைக்காக்கப்
படையார் தமக்குண்டோ பாரம் - அடைவாகச்
சிதரனுர் காக்கத் திருவவதாரஞ் செய்வர்
சேதனருக்கேனச் செயல்." (அச)

சித்தாந்தம்.

உடையா னுடைப்பொருளை யோர்மொழியே காக்கும்
படையாரன்றோ நடுங்கிப் பண்பா - லடைவாக
வேற்றுப் பணிசெய்வா ரெவ்வெவ் விடத்துமிருந்
தாற்றலிலாய் காணுதியிங் கால். (அ௫)

---

* வாமதேவர் முதலினோர்.

பூர்வபட்சம்.

"விச்சுவவ ரன்சுகனு மேலோன் சடதங்கி
அச்சுவத்தா மன்னநுமா னவ்வுருவன் - மெச்சுபுகழ்
பொங்குதுரு வாசன் பொலிசை கிடாவியனர்
சங்கரன் பிறப்பன்றே தாம்." (அசா)

"அங்கி யமன்வாயு வாகலா டலன்முதலோர்
இங்குதித்த தோற்றங்கள் யாவையுமே - பொங்கறிவின்
மிக்கவர்கண் மாண விளம்பினரோ வில்லையஃ
தொக்கு மரன்பிறப்புக் கும்." (அஎ)

சித்தாந்தம்.

சுகராதியர் சிவனைச் சொல்வ தெவன்பேதாய்
சுகர்முதலோ ரன்பிற் சுழன்றே - அகராதிக்
காணுஞ் சிவனடியர் கண்டா யமிசமெனல்
பேணுமருள் பெற்றதனாற் பேசு. (அஅ)

கோடியினுங் கோடியாக் கூறும் படியமிச
நாடியறு சூழையிட நக்கடவுள் - தேடியடைந்
திட்டான் பிறந்தானே வேழையிரா மன்போல
முட்டாளே யோனிவழி முட்டி. (அகூ)

மிக்கவர்கண் மாண விளம்பினர்கா ணெஞ்சிவனைத்
தக்க படிப்பிறவாத் தன்மையனென் - றொக்கவரி
யோனிவாய்ப் பட்டானென் றோதியதுங் காண்டிமறை
தானிசைக்குந் தன்மை தழைந்து. (கூ0)

விசேடம்.

பிரமன் படைப்பெங்கே பேதாய்நின் மாலோன்
உரமுற்ற காப்பெங்கே யோதாய் - பிரமன்
தலையொன்றை யெங்கோன் றடிந்திட்ட வந்நா
ளலைவுற்றா ரன்றே யவர். (கூக)

பிரமன் றலையொன்றைப் பேதாய் தெறலா
லரனுருக் கத்தி யறைவாய் - பிரமன்
இறந்தானோ வப்படியு மேற்குமோ வூழிக்
கிறைமாட் டுண்டானா லியம்பு. (௯௨)

ஊழிக் கிறைமாலா யோதுவாய் நீரினிடை
யாழு மவன்றானு மங்நீரோ - டூழிக்
கிறையா முருத்திரன்கண் ணெய்துமங்கி முன்னே
செறியுமோ தீரா துயிர். (௯௩)

செத்தகதை கோடி சேருமே சீரழிந்த
தெத்தனையோ கோடி யிசையுமே - யித்தரையில்
நின்மாலுக் கந்தோ நிஜங்காணா யின்னுமுறு
கன்மாலென் செய்வாய்நீ காண். (௯௪)

நித்த னறிஞ னிராலம்பன் பூரணனெம்
மத்தன் சிவனன்றி யாய்ந்திடி னிங் - கொத்துரைசெய்
வாரோ வமல னவனையே தெய்வமெனப்
பாரோர் பணிவார் பரிந்து. (௯௫)

மங்களாசரணை.

தின்போதத் தாலழியு நீர்மைசெட வேயுண்மை
யென்போதத் தாலிங் கிசைத்தேனால் - மன்போதங்
கொண்டுமறை நூல்கொண்டு கோதாட் டொழிகண்டாய்
பண்டைவினை போகும் பறந்து. (௯௬)

வீணே சிவநிந்தை மேல்விழுந்து செய்யற்க
வீணே விளையும் வினைப்போகம் - வீணேகாண்
அச்செய்கை யாதலினா லச்சுதனை மெச்சிநிதம்
பச்சிலையிட் டேத்தாய் பரிந்து. (௯௭)

அச்சுதனைப் பூசித்தே யன்புசெயி னுங்கவன்ற
விச்சைவழி நீயு மிசைந்தின்றே - மிச்சையெனப்

போகமலம் விட்டுப் புராந்தகனுக் காளாவாய்
சோகமறுஞ் சொன்னேன் சுகம். (கூஅ)

சுகந்தருவான் காழிச் சுடர்ஞான வள்ளல்
குகனு மவனருளைக் கொண்டே - செகமறியப்
பெற்றான் சிவனுருவம் பின்னைப் பிரானென்று
கற்றார் மகிழ்ந்துரைப்பர் காண். (கூகூ)

அந்தோ நரகி லழியாமல் காழிவளர்
சிந்தா மணியருளைச் சேரவே - முந்தானை
யோலிட் டழைத்தபொழு துற்றமணி வண்ணனையே
யோலிட் டழைப்பா யுவந்து. (க00)

வாழ்வுவருங் கண்டாய் வண்பூதி கண்டியணிந்
தாழியானெங்க ளரனடியார் - சூழலின்மு
னேத்துமா போலென்று மேத்துவா யுள்ளமுவந்
தோத்துரைக்கு முண்மை யுணர்ந்து. (க0க)

வாழ்த்து.

மறையா கமம்வாழி மாலயனும் வாழி
பிறைசூடு மெங்கள் பெருமானே - டறம்வளர்த்தாள்
வாழி சிவசமயம் வாழிபர மாசிரியர்
வாழியுல கெல்லா மகிழ்ந்து.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பரசமய கோளரியார் திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானசம்பந்தகுரவேநம:

சிவாதிக்யரத்நாவளி.

இஃது

உபயவேதாந்த பிரவர்த்தகாசாரியரும்

சிவாகமசித்தாந்தஞான நிஷ்டருமாய்

எழுந்தருளியிருந்த

காட்டாவூர்

ஸ்ரீசுந்தர சிவாசாரிய சுவாமிகளால்

இயற்றப்பட்டு,

ம-ா-ா-ஸ்ரீ

கூளூ - சபாபதிமுதலியாரவர்களால்

ஊ - புஷ்பரதசெட்டியாரது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்.

பாவ௵ மாசி௴.

முதற்பதிப்பு.